1987 ஏப்ரல் 24]

(உ) காட்டுமன்னார் கோயில் தொகுதி ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ வசதியின்மை.

*திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ''காட்டுமன்னார் கோயில் தொகுதியிலுள்ள ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதுமான மருந்துகள் வழங்கப்படாதது மருத்துவர்கள் பணி நேரத்தில் இல்லாமலிருப்பது மற்றும் மருத்துவர்கள் ஆதி திராவிடர்களை தொட்டு சிகிச்சை அளிக்காதது குறித்தும் உள்ள'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

அறிக்கை.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 பெறுமான மருந்துகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 1986–87 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 15,000-க்கான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 5,000 அவசரத் தேவைக்கான மருந்துகள் வாங்குவதற்கான மேற்கண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர் தெரிவித்திருக்கிறார். ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென உருவாக்கபபட்டுள்ள 3 மருத்துவர் பதவிகளும் நிரப்பப்பட்டு அவர்கள் பணியிலிருக்கிறார்கள். அவர்கள் பணி நேரத்தில் பணி நிலையத்தில் இல்லை எனபது பற்றிய புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை. அப்படி பணி நேரத்தில் மருத்துவர்கள் நிலையத்தில் இல்லாதது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அத்தகையவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது. மேலும் ஆதி திராவிட மக்களைத் தொட்டு சிகிச்சை அளிக்காதது பற்றிய புகார் எதுவும் பெறப்படவில்லை என ஆரம்ப சுகாதார நிலைய் இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

(முற்பகல் 11–20)

திரு. சா. ஜெயச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் ஒரு ஆண்டுக்கு ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 20,000 பெறுமானமுள்ள மருந்துகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ. 15,000-க்கான மருந்துகளும், மேலும் 5,000 அவசரத் தேவைக்கான மருந்துகளும் வழங்குவதற்கான உத்திரவு

வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது முற்றிலும் தவறானது என்று நான் கருதுகிறேன். காரணம் அங்கே விசாரிக்கின்றபோது அப்படியில்லை என்று அந்த ஆஸ்பத்திரியில் பணிபுரிகின்ற டாக்டர்கள் கூறுகிறார்கள். அடுத்தபடியாக பணியாற்ற அவர்கள் உரிய நேரத்திற்கு வருவதில்லை. இது சம்பந்தமாக மனுக்கள் எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த 15-2-87 அன்று ஆயங்குடி கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட பொது மக்களும், அந்தப் பகுதியைச் சார்ந்த மற்ற பொது மக்களும் எனக்கு ஒரு புகார் மனுவைக் கொடுத்தார்கள். அந்த புகார் மனுவில் 3 குற்றச்சாட்டுகள் இருந்தன. நகல் என்று போட்டு, மாவட்ட சுகாதார நல அதிகாரி, கடலூர் என்றும் ஆரம்ப சுகாதார நல இயக்குநர், சென்னை என்றும், மாண்புமிகு முதலமைச்சர் என்றும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்றும் நான்கு பெட்டிஷன்களில் ஒரு பெட்டிஷன் எனக்கு வந்தது. அதுசம்பந்தமாக கடந்த 22-2-1987 அன்று அந்த ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைக் கேட்பதற்காக நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சென்றேன். நான் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சென்றடையும்போது சரியாக காலை மணி 11-25 ஆனால் அங்கே ஒரு மணிவரை காத்திருந்தும்கூட எந்த மருத்துவர்களும் வரவில்லை. ஆனால் அங்கே சுமார் 60-க்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நல அலுவலர்கள் மெட்டர்னிட்டி அஸிஸ்டெண்ட் உட்பட இருப்பதாகச் சொன்னார்கள். மூன்று டாக்டர்கள் பணிபுரிவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கு யாருமே இல்லை. சுமார் 1 மணிக்கு ....(குறுக்கீடு.)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி தான் கேட்கலாம். 4 நகல்களில் 1 நகல் எனக்கு வந்தது, மற்ற மூன்று நகல்கள் எங்கெங்கே போயின என்பதையெல்லாம் சொல்கிறார். என்ன வேண்டும் என்பதைக் கேளுங்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு எந்தப் புகார் மனுக்களும் வரவில்லை என்று விவர அறிக்கையில் இருக்கிறது. ஆனால் பொதுமக்கள் மனு அனுப்பியிருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படியானால் அந்த இயக்குநர் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறாரா? இதையெல்லாம் களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் ....(குறுக்கீடு)

1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். விவரம் கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்வார். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கும்படி பெட்டிஷன் எழுதிக் கொடுங்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, 3 மருத்துவர்கள் ஆதிதிராவிடர்களைத் தொட்டுகூட வைத்தியம் பண்ணுவது கிடையாது. சரியான நேரத்தில் வருவது கிடையாது. காரணம் அந்த மருத்துவமனையில் பணிபுரிவதற்கு விருப்பம் இல்லை என்று நினைக்கிறேன்.......(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த மானிய கோரிக்கையில் பேசவேண்டியதை உறுப்பினர் அவர்கள் இப்போது பேசுகிறார். என்ன வேண்டும் என்று கேள்வியாக கேளுங்கள். உண்டா இல்லையா என்ற இரண்டில் ஒரு பதில் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன கேட்க விரும்புகிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மருத்துவர்கள் வரவில்லை, மருந்து சரியாக கொடுக்கப்படவில்லை, ஆதிதிராவிடர்களைத் தொட்டு வைத்தியம் பார்ப்பதில்லை. ஒரு மணிக்கு உறுப்பினர் சென்றபோது மருத்துவர் வரவில்லை. இவற்றைப்பற்றி நான் தவறானத் தகவலைத் தரவில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட தகவலிலிருந்துதான் கொடுத்தேன். உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதிக் கொடுப்பார்களானால் நிச்சயமாகச் சொல்கிறேன், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆதிதிராவிடர்களை எந்த அதிகாரியாவது தொட்டு வைத்தியம் பார்க்கவில்லையென்று நிரூபிக்கப்படுமேயானால், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

(ஊ) விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''விபத்து காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்கும்போது சட்டபூர்வமான சடங்குகளுக்கு முதலிடம் கொடுத்து மருத்துவ சிகிச்சையினை இரண்டாம்பட்சமாக நடத்துவதால் பாதிக்கப்படுகிற பொது மக்களது கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.